முருகப்பெருமான் துணை

**மகான் முனையடுவார் நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

03.06.2021, வியாழக்கிழமை

1. ஞானப்படை கொண்ட தலைவனே
ஞானிகள் துணைகொண்ட அரங்கனே
தானதருமம் கலியில் சிறந்து
தன்னார்வ தொண்டுகள் பெருகிஇனிதே
2. இனிதே கலிதன் பலமிழக்க வேண்டி
ஏகாந்த சக்தியாய் வந்த தேசிகனே
கனியும் இனி ஞானயுகம் என
கண்டுரைத்து யோகபிரசன்ன ஆசி
3. ஆசியை பிலவ விடைதிங்கள்
அய்நான்கு திகதி குருவாரம்
(பிலவ வருடம் வைகாசி மாதம் 20ம் நாள், 03.06.2021, வியாழக்கிழமை)
ஆசிதனை முனையடுவார் நாயனாரும்
அருளுவேன் உலக நலம் காண
4. காணவே கலிமுற்றி வருக
கண்டடையும் எங்கும் உயிர்பலி
ஞானமிலா செயல்கள் பரவி
நம்பகமின்றி மனிதர்களிடை அவலம்
5. அவலம் மிகுந்து சுயநலம் கூடி
ஆசை பேராசையாகி வாட்டும்
அவனியே தேசங்களிடை குரோதம்
ஆக்கிரமிப்பு பூமி அபகரிப்பு
6. அபகரிப்பு ஆளுமை உரிமைபறிப்பு
அண்டை நாடுகளுடன் நாசவேலை
அபாயமான தீவிரவாத தன்மை
அளவில்லா அநீதி பெருகி நிற்க
7. நிற்கவே இயற்கை பேரிடராகி
நிலநடுக்கம் புயல் சீற்றம்
பற்றியதே நச்சுக்கிருமி தாக்கம்
பலி மிகுந்தும் மனிதன் அஞ்சாநடக்க
8. நடக்கவே கட்டுப்பட்டா அச்சுறுத்தல்
நச்சுக்கிருமி வழி தொடருதப்பா
இடரை வெல்லும் நிலைவேண்டின்
இந்தமனித சமூகம் இயல்புநிலைக்கு வந்து
9. வந்துமே தருமசிந்தை வளர்த்து
வாழ்வின் ஞான ரகசியம்அறிந்து
முந்தைவினை செயலின் வினை
முழுமைபட அகலும்படி சரணாகதி

10. சரணாகதி ஞானவழியில் அடைந்து
சற்குருவாய் வந்த அரங்கமகானை
சரணடைந்து சன்மார்க்க நெறிஏற்று
சகலதும் தயவின் வடிவாக செயல்பாடிருக்க

11. இருக்கவே கலித்துன்பமான
எல்லா ஆபத்தும் விலகும்
வருத்தும் நச்சுக்கிருமி இடரும்
வந்தச் சுவடுதெரியா அகன்றோடும்

யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–